[1993 அக்டோபர் 29

முற்பகல் 11–05

அதே போல, 200 பறவைகள் கொண்ட, கோழிப்பண்ணைக்கு சுமார் ரூ 9,900 நிதி உதவி, கோழிப் பண்ணை ஆரம்பிப்பதற்காக இந்த நிதி உதவியின் கீழ் வழங்கப்படுகிறது. ஒட்டன்சத்திரம் பகுதியைப் பொறுத்த வரையில், இந்தக் காளான் வளர்ப்புத் தொழில் மற்றும் கோழிப் பண்ணைத் தொழில் டோக்ரா திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுகிறது. தற்போது டோக்ரா திட்டத்தின் கீழ் காளான் வளர்ப்புத் தொழில் பெரியார் மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், சேலம் மாவட்டம், திருச்சி மாவட்டம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் தான் இந்தப் பணி மேற் கொள்ளப்படுகிறது ஒட்டன்சத்திரம் அண்ணா - திண்டுக்கல் மாவட்டத்திலே வருகின்ற காரணத்தினால் காளான் வளர்த்தல் தொழிலைப் பொறுத்த வரையில் வாய்ப்புள்ள இடங்களில் வேளாண் துறை சிபாரிசு செய்யும் பட்சத்திலே இந்தத் தொழில் செய்ய ஊக்குவிக்கப்படுகிறது ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேளாண் துறை அமைச்சரை அணுகி இதற்குண்டான சிபாரிசுகளைப் பெற்றுத் தருவார் என்று சொன்னால் நிச்சயமாக திண்டுக்கல் - அண்ணா மாவட்டத்திலே இந்தத் தொழில் தொடங்குவதற்கான வாய்ப்பை அரசு உருவாக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 78, திரு. எம். ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை,

வினா எண் 79, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

79—

கன்னியாகுமரியில் இறால் மீன் வளர்க்கும் திட்டம்.

* 17483—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் இறால் மீன் வளர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திற்கென தனியாக இறால் வளர்ப்புத் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கடலும் சங்கம் ஆகும் கன்னியாகுமரியில் மீனவர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். தூத்துக்குடியில் ஏழரை கோடி ரூபாய் அளவில் இறால் மீன் வளர்ப்பதற்கான திட்டத்தை அறிவித்தது போல குமரியிலே இறால் மீன் வளர்ப்பதற்கு சிறப்பான ஒரு திட்டத்தை அறிவிக்க மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் பாறைகள் அதிகமாக இருக்கின்ற இடம். இறால் வளர்ப்பதற்குரிய இடம் ஒரு உவர்நீர் எஸ்டேட் ஆக, அக்குவா வாட்டர் எஸ்டேட் நிறுவுவதற்கான, அந்த அளவிற்கு ஒரு பரந்த நிலப்பரப்பு கன்னியாகுமரி மட்டத்திலே இல்லை என்பதை நான் அறிகிறேன். அந்த வகையிலே அவர் பக்கத்து மாவட்டத்திலே நமது தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஐந்தாவது உவர்நீர் மேம்பாட்டு முகமை, பிராக்கிஷ் வாட்டார் பிஷ் ஃபார்ம் டெவலப்மென்ட ஏஜென்சிஸ், இராமநாதபுரத்திலே தொடங்கி இருக்கிறார்கள். அந்த வகையிலே தூத்துக்குடியிலே அவர்கள் உறுப்பினர்களாக, அந்த டி.எஃப் டி.ஏ.விலே உறுப்பினர்களாக சேர்ந்தார் அவர்களுக்கு வேண்டிய மானியம் மற்றும் தேவையான டெக்னாலஜிஸ் அளவுக்கு அவர்களுக்கு உதவி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் இறால் மீன் வளர்ப்பதை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு செய்யும் சலுகைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன் உரிமை விண்ணப்பதாரர்கள் எக்டேருக்கு 30 ஆயிரம் ரூபாய் வீதம், அதிகபட்சமாக, 5 எக்டேருக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் வீதம் மானியமாக வழங்கப்

படுகிறது. இது தவிர மிகத் தீவிர முறை இறால் வளர்ப்போருக்கு ''இன்டென்சிவ் கல்சர்'' என்று சொல்லக் கூடிய மிகத் தீவிர முறை இறால் வளர்ப்போருக்கு 10 எக்டேர் வரையிலும் மானியம் வழங்கப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல் தேவையான அளவுக்கு தொழில் நுட்பம் தந்தும் உதவுகிறோம். அந்த வகையில் அந்த உதவிகளை எல்லாம் பெற்று நம் நாட்டிற்கு அன்னியச் செலாவணி ஈட்டித் தருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 80, திரு. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

80—

துறையூரில் சாலையோர விடுதி.

*19119—திரு. வி. ரவிச்சந்திரன் :

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், துறையூரில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலமாக சாலையோர விடுதி (Hotel) அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை. இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சிக் காலத்தில் உப்பிலியாபுரம் தொகுதியில் துறையூரில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலமாக சாலையோர, விடுதி, ''மோட்டல்'' அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். அவர் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இந்தக் கேள்வி போடும் போது, இந்த டிப்பார்ட்மெண்ட் மாண்புமிகு இதயதெய்வம்